சுருக்கம்

பள்ளிக் கல்வி – பொது நூலகத்துறை – பொது நூலகங்களுக்கு கொள்முதல் செய்யப்படும் தமிழ் நூல்களுக்கு புதிய ஏற்பு விலை நிர்ணயம் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக்கல்வி (பொ.நூ.2)த்துறை

அரசாணை (1டி) எண்.707 நாள் 31.10.2018

திருவள்ளுவராண்டு, 2049
ஹேவிளம்பி வருடம், ஐப்பசி–14

படிக்கப்பட்டது:–

1. அரசாணை (1டி) எண். 150 பள்ளிக்கல்வி (கே1)த்துறை நாள் 27.07.2001.
2. அரசாணை (1டி) எண். 11, பள்ளிக்கல்வித்துறை நாள் 21.01.2003.
3. அரசாணை (1டி) எண். 347, பள்ளிக்கல்வி (கே2)த்துறை நாள் 09.09.2009.
4. பொது நூலக இயக்குநரின் கடித ந.க. எண். 1124/எ1/2018 நாள் 04.06.2018 மற்றும் 14.08.2018.

----

**ஆணை:-**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணை (1டி) எண்.150, பள்ளிக் கல்வித் (கே1) துறை நாள் .27.07.2001–ல் பொது நூலகத் துறையின் கீழ் செயல்படும் நூலகங்களுக்கு வாங்கப்படும் தமிழ் நூல்களுக்கான புதிய ஏற்பு விலையை நிர்ணயம் செய்வது தொடர்பாக அரசுக்கு தக்க பரிந்துரை செய்ய வேண்டி கீழ்க்கண்ட உறுப்பினர்களை கொண்ட குழு ஒன்றினை அமைத்து அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

1. பொது நூலக இயக்குநர் - தலைவர்
2. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் (தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியல் பணிகள் கழகம்) - உறுப்பினர்
3. இயக்குநர், எழுதுப்பொருள் அச்சுத்துறை - உறுப்பினர்
4. தலைவர், தமிழ் நூல் வெளியீட்டாளர்/ விற்பனையாளர் சங்கம்– உறுப்பினர்

Scanned by CamScanner

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணை (1டி) எண்: 11, பள்ளிக் கல்வித் துறை, நாள்: 21.01.2003 மற்றும் மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணை (1டி) எண்: 347, பள்ளிக் கல்வி (கே2) துறை, நாள்: 09.09.2009 ஆகியவற்றில் தமிழ் நூல்களுக்கான ஏற்பு விலை பின்வருமாறு நிர்ணயம் செய்யப்பட்டன.

| அளவு | அரசாணை (1டி) எண் : 11, பள்ளிக் கல்வித் துறை, நாள்: 21.01.2003ன்படி நிர்ணயம் செய்யப்பட்ட ஏற்பு விலை | அரசாணை (1டி) எண்: 347, பள்ளிக் கல்வி (கே2) துறை, நாள்: 09.09.2009ன்படி நிர்ணயம் செய்யப்பட்ட ஏற்பு விலை |
|---|---|---|
| கிரவுன் அளவு (12.5 x 18 செ.மீ) நூலின் 16 பக்கங்கள் கொண்ட 1 பாரம் | ரூ. 2.70 | ரூ. 3.92 |
| டெமி அளவு (18 x 21செ.மீ) நூலின் 16 பக்கங்கள் கொண்ட 1 பாரம் | ரூ. 3.75 | ரூ. 5.43 |
| அட்டை கட்டுமானம் 10 பாரம் நூல் மொத்த ஏற்பு விலையுடன் கூடுதலாக | ரூ.1. 30 | ரூ.1. 89 |
| கூடுதல் ஒவ்வொரு 5 பாரத்திற்கு | ரூ. 0.40 | ரூ. 0.58 |
| காலிகோ / ரெக்சின் கட்டுமானம் செய்யப்பட்ட 10 பார நூலின் மொத்த ஏற்பு விலையுடன் கூடுதலாக | ரூ. 3.25 | ரூ. 4.71 |
| கூடுதல் ஒவ்வொரு 5 பாரத்திற்கு | ரூ. 0.40 | ரூ. 0.58 |

3. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட பொது நூலக இயக்குநரின் கடிதத்தில், தமிழ் நூல் வெளியீட்டாளர்/ விற்பனையாளர் சங்க செயலாளரின் வேண்டுகோளின் அடிப்படையில், மேலே பத்தி–1–ல் காணும் உறுப்பினர்களை கொண்ட குழுவின் கூட்டம் 07.05.2018 அன்று நடைபெற்றது என்றும், இக்கூட்டத்தில் தற்போது நடைமுறையில் உள்ள மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணை (1டி) எண் 347, பள்ளிக் கல்வித் (கே2) துறை, நாள்.09.09.2009-ன் படியான விலை நிர்ணயம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு சந்தை விலைவாசி, நூல் தயாரிக்க ஆகும் செலவினம் ஆகியவற்றை கணக்கில் கொண்டும், தற்போதுள்ள அபரிமிதமான விலைவாசி உயர்வு மற்றும் நீண்ட இடைவெளியாக 9 ஆண்டுகளுக்கு பிறகு விலை நிர்ணயம் திருத்தியமைக்கப்படுவதாலும், தற்போது நடைமுறையில் உள்ள காலிக்கோ, ரெக்சின் கட்டு உள்ள தமிழ் நூல்கள் அதிகம் பொது நூலகத்திற்கு, பதிப்பாளர்கள் மற்றும் விற்பனையாளர்களால் விநியோகம் செய்யப்படாத காரணத்தினால் அதனை கைவிடலாம் எனவும், 2016 மற்றும் 2017–ஆம் ஆண்டு பதிப்பு தமிழ் நூல்களுக்கு புதிய ஏற்பு விலை நிர்ணயம் செய்து அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

4. பொது நூலகத்திற்கு வாங்கப்படும் தமிழ் நூல்களுக்கான ஏற்பு விலையினை நிர்ணயம் செய்ய அமைக்கப்பட்ட குழுவின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில், பொது நூலக இயக்குநரால் பரிந்துரைக்கப்பட்ட தமிழ் நூல்களுக்கான புதிய ஏற்பு விலை நிர்ணயித்தினை நன்கு பரிசீலனை செய்து, அதனடிப்படையில் பொது நூலகங்களுக்கு

Scanned by CamScanner

கொள்முதல் செய்யப்படும் தமிழ் நூல்களுக்கு கீழ்க்கண்டவாறு புதிய ஏற்பு விலையை நிர்ணயித்து அரசு ஆணையிடுகிறது.

| வ. எண் | அளவு | புதிய ஏற்பு விலை நிர்ணயம் |
|---|---|---|
| 1. | கிரவுன் அளவு (12.5 x18 செ.மீ) நூலின் 16 பக்கங்கள் கொண்ட 1 பாரம் | ரூ.5.75 |
| 2. | டெம்மி அளவு (18 x 21 செ.மீ) நூலின் 16 பக்கங்கள் கொண்ட 1 பாரம் | ரூ.6.90 |
| 3. | அட்டை கட்டுமானம் 10 பாரம் நூல் மொத்த ஏற்பு விலையுடன் கூடுதலாக | ரூ.3.00 |
| 4. | கூடுதல் ஒவ்வொரு 5 பாரத்திற்கு | ரூ.0.75 |

மேலும், இப்புதிய ஏற்பு விலை நிர்ணயம் அரசாணை வெளியிடப்படும் நாள்முதல் நடைமுறையில் பின்பற்றுவதற்கும் (2018 முன்தேதியிட்டு கொள்முதல் செய்ய இயலாது மற்றும் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டு பதிப்பு தமிழ் நூல்களுக்கு பொருந்தாது) மற்றும் விலை ஏற்பு மாற்றியமைப்பது குறித்த கால இடைவெளியை 3 ஆண்டுகளாக நிர்ணயம் செய்தும் அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி / நிதி ஆகிய துறைகளின் அ.சா.எண். 15455/எ.அ2.2/2018, நாள் 17.10.2018 மற்றும் அ.சா.எண்.54706/கல்வி–2/2018, நாள் 29.10.2018–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
பொது நூலக இயக்குநர், சென்னை–2
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல்
மற்றும் கல்வியல் பணிகள் கழகம், சென்னை–6.
தலைவர்,
தமிழ் நூல் வெளியீட்டாளர்/ விற்பனையாளர் சங்கம், சென்னை–18.
இயக்குநர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை,
10, அண்ணா சாலை,சென்னை–2.
**<u>நகல்</u>**
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதுநிலை முதன்மை தனிச் செயலர், சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

Scanned by CamScanner